பத்திரிக்கை செய்தி

புதிய குடிநீர் இணைப்பு வழங்கவும் மற்றும் நிலுவை வரியை சரிசெய்யவும் லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய டிப்போ மேலாளருக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

புகார்தாரர் திரு.குமார், எண்.131, பச்சையப்பன் தெரு, ஜாபர்கான்பேட்டை மேற்கு, சென்னையில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய வீட்டில் புதிய குடிநீர் இணைப்பு மற்றும் நிலுவை வரியை சரிசெய்ய வேண்டி சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய டிப்போ எண்.138, ஏரியா-1, பம்மல் நல்லதம்பி தெரு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னையில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.வெங்கடேசன், டிப்போ மேலாளர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், பம்மல் நல்லதம்பி தெரு, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை, அவர்கள் தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். பின் லஞ்ச பணத்தை ரூ.4,500/- ஆக குறைத்து கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 07.01.2016 மேற்கொள்ளப்பட்டு திரு.வெங்கடேசன், டிப்போ மேலாளர் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.4,500/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது சிறப்பு நீதிமன்றம், சென்னை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 18.06.2025 திரு.வெங்கடேசன், டிப்போ மேலாளருக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மொத்தம் ரூ.1,00,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.